முருகப்பெருமான் துணை

**மகான் இயற்பகை நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.02.2023**, சனிக்கிழமை

1. தவசியே ஆறுமுக அரங்கனே
   தருமவான்களை படைக்க வேண்டி
   அவதாரம் எடுத்த ஞான தேசிகனே
   அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே அனுகூல ஆசிதனை
   குறைவிலா சுபகிருது கலை திங்கள்
   இருபானோர் திகதி காரி வாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் 21ம் நாள் 04.02.2023, சனிக்கிழமை)
   இயம்பிடுவேன் இயற்பகை நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மை வழி காட்டும் சன்மார்க்கம்
   ஞானதேசிகனார் கொள்கைதனில்
   நம்பிக்கை வைத்து உலகோர் வர
4. வருகவே எண்ணம் வழியில்
   வள்ளல் தன்மை எங்கும் பரவி
   தருமம் எனும் மகா சக்தி
   தரணியெங்கும் நிரம்பிட நேரும்
5. நேருமை குணம் கொண்டபடி
   நிலவுலகினில் மக்கள் சமூகம்
   வருமுலகில் முழுமை அடைந்து
   வாழும் காலமே நல்பதிவுகளாக
6. ஆகவே ஞானிகள் வெளிப்பட
   ஆறுமுகனார் வழிபாடு செய்து
   மகான் அரங்கன் அவதார
   மகத்துவம் பெருமை யாவும் அறிந்து
7. அறிந்துணர்ந்து தெளிவு கண்டு
   ஆத்ம ஞானத் தேடலில்
   அறிவுத் தெளிவு திடமும் கண்டு
   அனுகுவார் அனைவருமே ஞானியாகும்
8. ஆகுமே வரம்பல அடைவர்
   அழிவினை அகற்றும் வெல்லும்
   பகைமை ஆற்றாமை எனும்
   பலபல இன்னலை வென்று
9. வென்று மீள்வர் ஞானவானாக
   வீழ்ச்சி என்பது அனுகாதபடி
   நன்றான தேட்டு தனவளம்
   நல்வழி காட்டும் மனபலமும் கூடி

10. கூடியே சகல மாயைகளையும்
குருவருள் கொண்டு களைவர்
இடரின்றி இடை கண்டமிலா
இனிபிறவா பெரும் பேற்றை

11. பேற்றை ஞானிகள் ஆசிபட
பேருலகம் பாதுகாப்படைய
ஆற்றல்பட அடைந்து சிறப்பர்
அருளிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—